உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது
பிரதி விலை : சதம் 20.

ஆரம்பம் விரோதி ஹூ (1889, ஆவணிமீ 28-ம் உ  அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்  தொலைபேசி: 356

புத்தகம் 90  [illegible]  காலயுத்தி ஹூ சித்திரை மீ கரு-உ வெள்ளிக்கிழமை (28 - 4 - 1978)  இலக்கம்: உ

## குரவர் நாவுக்கரசரின் குருபூசைப் பெருமை

### ஈசன் எந்தை இணையடி நீழலில் மாசில்வீணை மாஇன்பம் மகிழ்ந்தவர்

உழவாரம் கையாக ஓங்காரம் உள்ளத்
தெழஆரம் ஏந்தி இரவி — எழுநேரம்
பெம்மானின் கோயில் பெருக்கும் பணியாளன்.
அம்மானே அப்பர் அறி.

**சித்திரைச் சதயமாம் உத்தமநாள் நாளைமறுநாள். மெத்தகு சைவ நெறி வித்தகராய் மக்கள் தம் குரவராய் விளங்கும் திருநாவுக்கரசு நாயனாரைச் சிந்தை செய உகந்த நாள்.**

சலம்பூவொடு தூபம் மறந்தறியாத தேவாரப் புலவன் அன்றோ அப்பர் அடிகள்.

செற்றம் உற்ற அரச அலுவலர் கற்றூணுடன் கட்டிக் கடல்மீது விடவும் நமச்சிவாயப் பற்றினால் அதுவே நற்றுணையாக ஆநந்தக் கரை அடைந்த அடியாரல்லவா அப்பர்.

வெப்பத்தினால் மேனியை வருத்தியபொழுதும் ஈசனே எந்தை என்ற சிந்தையினால் அந்த வெக்கையோ வீசு தென்றலாய்க் குளிர் ஊட்டிய இறை அருள் பெற்ற திருநிறை தொண்டனல்லவா நாவுக்கரசர். அப்பெரும் அப்பருக்கு அச்ச மென்செயும், அருவினை என் செயும், அஞ்சுவதுமில்லை அவர், அவர் அஞ்ச வருவதுமில்லை எவையும்,



திருச்சிற்றம்பலம்.

வாயானை மனத்தானை
மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து
முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை
ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத்
தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவம்ஆய
தன்மை யானைத்
தலையாய தேவாதி
தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல்
திருவாலவாய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்
பெற்றேன் நானே,
திருச்சிற்றம்பலம்,
—அப்பர்.

## தொழில்மகிமை அஞ்சலித்தினம்

ஆங்கில ஆண்டு வைகாசி மாதம் முதலாவது நாள் தொழில் மகிமை அஞ்சலித் தினமாக உலகமெங்கும் கொண்டாடப்பட்டுவருகின்றது

ஈழத்திலும் தொழிலாளர் கட்சிகள் இந்தநாளை விசேட விழாவாக அமைத்து வந்தனர்.

இவ்வாண்டிலே தர்ம நெறி அரசு என்ற நாமத்தைத் தாமே தமக்கு இட்டுக்கொண்ட அரசினர் இத்தினத்தை ஒரு புது விதமாகக்கொண்டாட ஏற்பாடுகள் செய்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

மூக்கியமாக 1 - 5 - 78 அன்று மதுக்கடைகள் மூடப்படும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிகின்றோம்.

தொழிலின் மகிமை மது விலக்கலிலே தங்கியிருக்கின்றதென்பதை இந்த நடவடிக்கை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

### அமரர் செல்வநாயகம் நினைவு அஞ்சலி

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் மறைந்த முதலாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் இவ்வாரம் நடைபெற்றன.

காந்தி சீடர் திரு. ஆர். ஆர். திவாகர் அவர்கள் அரிய நினைவுச் சிறப்புரை நிகழ்த்தினர் ——

## தொழில் மகிமைக் கொள்கை தொன்மைத்து

'இறை - ஒளி'

தமிழ்இனச் சால்பிற் சாரத் திகழ்மை
ரமதறி விற்கோ எட்டிய தில்லை.
தொழிலின் தூய்மை தொல்லோர் சொல்லே.
எழிலதற் குரிமையென் றெடுத்துரைத் தனரே.
உழுதுண் டுவாழ்வதற் கொப்பிலை என்றான்
விழுப்பொருள் விளம்பிய வள்ளுவன் என்றூற்
புதியதிக் கொள்கை, புறநாட் டவரே
அதினுயர் வுரைத்தனர் ஆமெனல் நகைப்பே!
மனிதனும் தொழிலும் மாநிலத் துடன்பிறப்
பெனினது உண்மை, இதனை உணரார்
பொதுவுடை மையும் புதிதென
எதனையும் கூசா தெடுத்துரைப் பாரே.

—O—

## துலா இராசியிலே மதிதுலங்கும் தூயவேளை

# சித்திரை நாள் சிறக்கும் திங்கட் பூரணை

விரதானுட்டானத்தைக் கிரமமாகப் புரிகின்ற கிரியாமார்க்கச் சமயிகள் இரவியும் மதியும் இயங்குவதை நுணுக்கமாகக் கண்ணுற்று அப்புனித வேளைகளிலே புண்ணியங்கள் ஆற்றிப் பரம்பொருளை வழிபடுவது வழக்கம்.

பெருவிரதங்களில் ஒன்றாகும் சந்திரா பூரணை நோன்பு சிறப்புடையது. சோதிடக்கணக்கிலே துலா ராசியிற் சித்திரை நட்சத்திரம் மேட ராசிக்கு நேர் பார்வையில் உள்ளது. எனவே பூரண பூரணச் சந்திரனின் பொலிவைப் பெறுகின்றது அந்நாள் பொன்னாள் தானே!

சித்திரைத் திங்களும் பூரணைத் திதியும் வசந்த ருதுவும் எல்லாம் நன்கமைந்த சித்திரையிற் சித்திரையிலே தேவேந்திரன் விசேட வழிபாடு செய்து பெரும பேறுற்றான் என்பது வரலாறு. தேவர்களுக்குப் பகற் பொழுதாகவுள்ள ஐந்து நாழிகைக் காலம் யாவற்றினும் மேலானது.

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

## துர்க்கை அம்பாளுக்குச் சித்திரத் தேர்

திட்டமிட்டவாறு தர்க்க தேவிக்குரிய சித்திரத் தேர் வேலை கலைஞர் பொன்னுத்துரை அவர்களாற் செவ்வனே நடைபெற்று வருகின்றது. ஆவணியில் வரும் பெருந்திருவிழாவுக்குச் சித்திரத் தேர் ஆயத்தமாகும் என்று திருப்பணிச் சபையினர் அறிவிக்கின்றனர்.

## திருநெறிய தெய்வீக மாநாடு

திருநெறிய தெய்வீக மாநாடும் ஞான சம்பந்தர் மகோற்சவமும் நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனத்தில் 11-5-78 முதல் ஐந்து தினங்கள் வரை நிகழும்.

## தமிழிசைப் பெருவிழா

யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 20-ஆவது ஆண்டு தமிழிசைப் பெருவிழா நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றுவருகிறது. சென்ற 29-4-78 ஆரம்பமாகிய இவ்விழா 30-ஆம் தேதி (ஞாயிறு வரை) தொடர்ந்து நிகழும். (ந. நி)

## மெய்கண்ட சாத்திர விழா

புனித பூமியாகிய கீரிமலையில் நகுலேஸ்வரத் திருத்தலத்தில் சித்திரை 3-ஆம் நாள் சிவநெறிக் கழகத்தார் சாத்திரவிழாவொன்றை நன்குநடத்தினர்.

பண்டிதர் ஐ. நமசிவாயம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த இவ்விழாவிலே பிரமாண இயல், இலக்கண இயல், சாதனை இயல், அநுபூதி இயல் என்ற பிரிவுகளில் முறையே வித்துவான் மு. கந்தையா, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, சைவப் பெரியார் மூ. ஞானப்பிரகாசம் ஆகியோர் அரிய கருத்துக்களை ஆய்வுரையாக நிகழ்த்தினர்.

ஆசிரியர் திரு விநாயகரத்தினம், யாழ் வளாகத்து பிரம்மஸ்ரீ சுப்பிரமணியஐயர் அமைப்பாளர்களாகவுள்ள சிவநெறிக் கழகம் நகுலேஸ்வர ஆதீன குரு பிரம்மஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் தலைமையில் முறையாக இயங்கி வருகின்றது. —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்தி ஹூ சித்திரை மீ கரு-உ வெள்ளி

## சமய பாடம் அமைக்கும் பணி

அல்லலும் தொல்லையும் அச்சமும் அபாயமும் மனிதனுக்கு நாள் கூடிக்கொண்டே வர உலோகாயுத மாமாலையில் மயங்கிய அரசுகளும் சமய அரட்டானமே இனித் தஞ்சம் என்று சற்று உணரத் தொடங்கிவிட்டனர்.

ஆணவ இருளுக்கிடையில் இடை இடையே இந்த நல்லறிவு தோன்றுவது ஆறுதல் கொடுக்கும் அறிகுறியாகும்.

இந் நாட்டு அரசினர் சமய பாடக் கல்வி இன்றி அமையாததென்ற முடிவுக்கு வந்துவிட்டனர். கட்டாய பாடமாகச் சமயக்கல்வி அமைய வேண்டுமென்ற ஆலோசனையை வரவேற்கும் அதே சமயத்தில் அக் கல்விக்குரிய திட்டம் உருவாக்கும் முறையை நன்கு பரிசீலனை செய்ய வேண்டும் என்று எச்சரிக்கையும் விடுக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

சமயம் மதம் என்பன மெல்லிய சொற்கள்; ஆனால் ஒல்லும் முறையான் அக்கல்வி வல்லமையுடையது, வாழ்க்கையை இம்மையிலும் மறுமையிலும் வளம்பெறச் செய்வது. எனவே சமயநெறி வரம்பு மீறாத வகையிலே அக்கல்வி அமைக்கப்படுவதையே நாம் சுட்டிக் காட்டுகின்றோம்.

சைவ சமயம் என்ற பெரும் பரப்பிலே சிறந்த சித்தாந்த நெறியே தமிழகத்தார் கைக்கொள்வது. அந்தப் பாரம்பரியம் பரந்ததொன்று. சந்தானாசாரியர் சமய குரவர்கள் வரலாற்றில் இந்த உண்மையை நன்கறியலாம். புண்ணியம் ஆக வேண்டும் பாவம் போகவேண்டும் என்ற புனிதக் கொள்கையுடைய சைவ சித்தாந்திகள் பதி பசு பாசம் என்னும் முப்பொருள் விளக்கமுடையவர்களாய் ஒழுக்க நெறி வரம்புக்குட்பட்டவராய் வாழ்கின்றவர்கள். எனவே சைவ சித்தாந்த சமய பாடத்தை வகுப்பது உண்மைச் சைவ சித்தாந்திகளுக்கேயுரிய கடமையாகும். ஆகவே சைவ சித்தாந்தத்தையே இலக்கணமாகக் கொண்ட சைவ சங்கங்களே இத்தகைய பாடப் புத்தகங்களை வகுக்கும் தகுதியுடையோர் என்க.

யாழ் நாட்டிலே சைவ சித்தாந்தப் பரம்பரையை நிலை நாட்டிய நாவலர் நற்றவகையாரின் உற்ற சீடர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன் ஓர்ந்து நிறுவிய திருச்சபையே சைவ பரிபாலன சபை என்பதை மீண்டும் மீண்டும் அழுத்தி அழுத்தி உரைப்பதில் நாம் பெருமை கொள்கின்றோம்.

சமயக் கல்வியைக் கட்டாய பாடமாக்க முற்பட்டிருக்கும் கல்வி அமைச்சவையினர் சைவசமயத்தைப் பொறுத்தவரையிற் கட்டாயமாக யாழ் சைவ பரிபாலன சபையாரின் ஆலோசனையைப் பெறவேண்டிய கடமையுள்ளவர்கள் என்று எடுத்துக் காட்டுகின்றோம்.

## துலா இராசியிலே மதி துலங்கும்...

1-ஆம் பக்கத் தொடர்ச்சி

இவ்வுலக வாழ்வு நீத்த தாயாருக்குப் புத்திரர் இவ்வேளையிற் பிரத்தியேக நினைவு நிகழ்ச்சி எடுப்பர். பிராமணோத்தமர்களுக்குத் தானம் வழங்கப் புண்ணிய தீர்த்தமாடி புனிதன் கோவிலிற் பூசை காண்பர்.

### சித்திரைக்கஞ்சி விருந்துச் சிறப்பு

மாகேசுர பூசையில் வளமானது சித்திரைக்கஞ்சி, பண்பான பச்சை அரிசியும் பசும்பாலும் தேங்காய்ப் பாலும் நல்லவண்ணமாய்ச் சேர்த்தமைந்த கஞ்சி திவ்வியமானது. பிதிர்க்கடன் பேணும் பெருமை வாய்ந்தவர்கள் சித்திரைக் கஞ்சி செய்து கோவில் முன்றிலிற் கூடும் அடியார்களுக்கு அன்பாய் வழங்கி ஆனந்தமடைவது தமிழக வழக்கம்.

### பேரேடு பேணும் பெரியவர்

ஆன்மகோடிகளின் ஐந்தொகைக் கணக்குத் தானுகவே பதியப்படும் புதுமையானது. பேரேடு பேணும் பெரியவருக்குரிய நாமம் சித்திர புத்திரனார் என்பதே. புலவர்க்கு வெண்பாப் புலி என்ற புகழுடைய புகழேந்தியார் கலிவெண்பாவாகச் சித்திர புத்திரனார் கதையைப் புனைந்திருக்கின்றனர். "பாவ புண்ணியங்கள் பதித்தெழுத வந்துதித்தார்" என்று சித்திர புத்திரனாரைப் புகழ்ந்தார் புகழேந்திப் புலவர். சென்ற ஞாயிற்றுக்கிழமை இவ்விரத நிகழ்ச்சி எங்கும் விமரிசையாக நிகழ்ந்தது.

## உ
## தொண்ணூறும் ஆண்டின் துலக்கம்!

தொண்ணூறும் ஆண்டு துலக்க 'இந்து சாதனம்'
கண்ணூறு ஏதுமின்றிக் கண்ணாக — எண்ணூறு
நீடு நிலைத்து விமலன் இறைமொழியாய்ப்
பீடு பெறவேத்து வாம்.

சிவபாதசுந்தரனார் நூற்றாண்டுவிழா வெளியீடு

## சிவபாதசுந்தரனார் நினைவு

(திரு. க. வைரமுத்து)

தெய்வத் திருவாத்தி நீழலை மேவிய
மெய்யனே தந்திமுகத் தாதையே — துய்ய
சைவப்பெரி யார்பத்தும் பாங்குடன் பாட
இவனருள் நீவாக்கி லமர்ந்து.

இந்த அரும்பிற விந்தைமிகு நன்முத்தாய்
எந்தைபரன் ஈடில் திருநாடு — தந்தசிவ
சித்தாந்தச் செந்தேன் சிவபாத சுந்தரனார்
இத்தரையில் தஞ்சம் எமக்கு. 1

தென்னா டுடைய சிவனேயென் நாட்டவர்க்கும்
நின்றருள் செய்வோன் எனவாய்ந்து — மன்னுபுகழ்
சித்தாந்தம் செப்பினார் சீராய்ச் செகத்துள்ளோர்
பத்தியுடன் வாழுவிப் பார் 2

தான்பெற்ற பேரின்பம் மேலும்பெற் றுய்ய
சான்றோன் சிவபாத சுந்தரனார் — மேன்மைகொள்
மன்னுசைவ சித்தாந்த சாரத்தைத் தந்தனரே
நன்றாக ஆங்கிலத் தால். 3.

சைவமொன் றே தாளினை சேர்த்துத் தருமே
பவமளித்து அத்துவிதம் என்ற — தவயோகி
சைவப் பெரியார் சகலருக்கும் சற்குருவே
உய்வை யுணர்த்தாசா னே. 4.

எல்லோரும் ஈசனின் சேய்கள் இலவசக்
கல்வி அனைவரும் கற்றுமா — பொல்லா
மூகாமை தனையும் முறைத்து உழைத்தார்
தகாதோர் திகைக்கத் தனித்து. 5.

தருக்கம் கணிதமுடன் கல்லாங் கிலமும்
விருப்புடனே நாடிப் பயில — குருவாய்
அதிபராய்ப் பல்கலைக் கூடங்கள் பேணி
நிதியமா னாரே எமக்கு. 6.

கல்விச் சபைதனில் நல்லங்கம் தாங்கியவர்
சொல்லிய பொன்னுரை இன்றுமே — எல்லோரும்
ஏற்பரே நல்லுரை யாமென என்றுந்தான்
போற்றுவரே பாரிற் புகழ்ந்து. 7

மாற்று மதத்தார் மருட்டில் மயங்கிய
ஆற்றலில் மாணவரைத் தேடியெங்கும் — தேற்றி
சிவவழி சேர்த்தின்ப வாழ்வளித்தார் சீராய்
சைவப் பெரியார் பரிந்து. 8

யாதுமூரே யாவருங் கேளிர் எனவோதும்
மூதுரை முற்றுணர்ந்து வாதிட்டார் — ஓதுசைவ
நீதிஅன்பின் நெறியென்றார் வீணாகச்
சாதி குறிப்பார் தமக்கு. 9

சித்தாந்த சாகரமாய் சற்குருவாய் சீர்பெறு
வித்தகனாய் வீட்டு வழிகாட்டும் — சித்தனாய்ச்
சித்தாந்தச் செம்மல் சிவபாத சுந்தரனார்
இத்தரையில் மின்னும் விளக்கு. 10

### கற்பக விநாயகர் கோவில் தர்மகர்த்தா சபை 43-ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம்

## தடை செய்க!

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் தர்ம பரிபாலன சபை 43ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 23-4-78 இரவு 7 மணியளவில் திரு. வை. ச. செந்தில்நாதன் அவர்கள் தலைமையிற் கூடியது.

பின்வருந்தீர்மானம் ஏற்கப்பட்டது

"சிவராத்திரி புனித தினமாகும்; அன்று இரவிற்றான் ஆலயங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறும். இத்தினத்தில் படமாளிகைகளில் படம் காட்டப்படுவதை தடை செய்யப்பட வேண்டும். அத்துடன் இத்தினத்தில் மதுபானக்கடைகளும் மூடப்பட வேண்டும். போயாதினம்போல இத்தினமும் புனித நாளாகக் கழிப்பதற்குக் கலாச்சார அமைச்சர் ஆவன செய்ய வேண்டும்".

புது வருட தர்மகர்த்தாக்களாக 15 பேர் தெரிவு செய்யப்பெற்றனர்.

சட்டத்தரணி, வை ச. செந்தில்நாதன், தலைவர், தி. பரமலிங்கராஜா, உபதலைவர் வ. கந்தசாமி கௌரவ செயலாளர், மு.க. இரத்தினவேலுப்பிள்ளை - உப செயலாளர், திரு. வ. வள்ளிநாயகம் பொருளாளர், திரு எஸ். பி. சேகர் கணக்குப் பரிசோதகர், திரு: எம். சக்திவேல், அ பாலசுந்தரம். தி. மயில்வாகனம், வை. செ சுப்பிரமணியம், செ. சுப்பிரமணியம், அ கந்தையா, க. சேனாதிராசா, ஆர். வி எஸ். பாலசுப்பிரமணியம், சொ. இராமசாமிச் செட்டியார், க. பசுபதி.

### அருள்மிகு. நகுலாம்பிகை தேர்விழா

கீரிமலை நகுலேஸ்வரத் திருத்தேவி மகா விழாக்கள் சித்திரைத் திங்களில் நடைபெற்றன.

தேர் உலா சித்திரா பூரணையான சனிக்கிழமையும் தீர்த்தம் மறுநாட் காலையிலும் சிறப்பாக நிகழ்ந்தன;

### கதிரைமலைச் சிவன்கோயில் திருவிழா

கன்னை நகர்க் கதிரைமலைச் சிவன்கோயிற் பெருந்திருவிழாக்கள் வழமைபோல நிகழ்ந்தன. சித்திரா பூரணையன்று தேர் விழாவும் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தவிழாவும் நிறைவெய்தின.

### சந்திரசேகரப் பிள்ளையார் கோயில்

கன்னைநகர் சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் மகா விழாக்கள் நடைபெற்றுச் சித்திரை எட்டாம் நாள் தேர் விழா நிகழ்ந்தது. சித்திரா பூரணையன்று தீர்த்தவிழா நடைபெற்றது. சொற்பெருக்குகள் விழாக் காலத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக விருந்தன.

### காரியிற் பிள்ளையார் கோவில்

சித்திரை 10-ஆம் நாள் ஆரம்பமான ஆண்டுப் பெருவிழாக்கள் வருகிற திங்கட்கிழமை இரதபவனியும் செவ்வாய்க்கிழமை தீர்த்தவிழாவும் நிகழ்வதுடன் நிறைவெய்தும். சமயப் பிரசங்கங்கள் விசேட நிகழ்ச்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசை செய்பவர்கள்

[ அர்ச்சவேர் சிவஸ்ரீ ச குமாரசுவாமிக் குருக்கள் ]

குரு லிங்க சங்கம பக்தியுள்ளவர்களும், ஆகம உணர்ச்சி உள்ளவர்களுமாகிய பெரியோர்களே ஆலய தருமகருத்தாக்களாய் இருத்தல்வேண்டும். அவர்களே ஆலயத்தை விதிப்படி நடாத்திச் சமயத்தை வளர்ப்பார்கள். அவர்கள் அங்கே நடைபெறும் கிரியைகளையும் முறைகளையும் முறைப்படி செய்யாவிடின் அதனால் வரும் கேட்டையும் அறிந்து பழி பாவங்களுக்குப் பயந்து வேதாகம அறிவும் நல்லொழுக்கமும் ஈசுர பக்தியுமுடைய சிவாசாரியர்களை நியமித்துக் கிரியைகளைச் செய்விப்பார்கள்.

கோச்செங்கட் சோழநாயனார் திருவானைக்காவில் அழகலிங்கேசுரருக்கு அருச்சகர்களாக அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்களாகும் ஆதி சைவர்களை நியமித்தார். அவர்கள் அருச்சித்து வருநாளிலே அரசரும் பணி கேட்ப மற்றையவர்களும் எக் கருமஞ் செய்யினும் இன்றியமையாது நல்ல விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளும் தன்மையுடைமையினால் தம்மை மதித்துக் கர்வங்கொண்டார்கள். ஞானத தவத்தில் வாழ்தலினும் அழகலிங்கேசுரருக்குப் பூசை செய்வதனாலும் பெருமைகளெல்லாம் தமக்கு வந்தன என்று அறியாமல் அகமதிப்பால் கணிகையருடைய அழகை நுகர்ந்தும், சிவத்திரவியங்களை கவர்ந்தும், சிவபுண்ணியங்களைச் செய்யாதும் பயின்று வந்த ஒழுக்கங்களை முற்றுக விடுத்தும், மணி அடித்தல வாத்தியங்களை முழக்குதல் என்னுமிவைகளே அன்றி, பிறவிப் பிணி நீங்க மெய்யன்போடு பூசை செய்யாது தவறுகளையே செய்தார்கள. மனதறறங்கிய கரவுடையவர்களாய் அச்சமற்றயோர் நடப்ப ''மனமுருகி நினையாதார்கு வஞ்சன காணை' என ஸ்ரீவாகீசர் கூறியாங்கு வஞ்சகர்க்கு வஞ்சகராகிய சிவபெருமான் திருவுளங்கறுத்த அவர்களை அழிப்பதற்குத் திருவுளங்கொண்டிருந்தார் (வளரும்)

நாவலர் 2ம் சைவ வினாவிடை

## விபூதி இயல்

ஆசாரியராயினுஞ் சிவனடியாராயினும் விபூதி தந்தால், எப்படி வாங்கித் தரித்தல் வேண்டும்?

மூன்று தரமாயினும் ஐந்துதரமாயினும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கித் தரித்துக்கொண்டு முன்போல மீண்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

எப்படிப்பட்ட விபூதி தரிக்கலாகாது.

ஒரு கையால் வாங்கிய விபூதியும், விலைக்குக் கொண்ட விபூதியும் சிவதீட்சையில்லாதவர் தந்த விபூதியும் தரிக்கலாகாது.

## இலவசம்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் குருபூசைகளைக் கொண்டாடுகின்ற சபைகள், மன்றங்களுக்கு சுவாமிகளின் திருவுருவப்படங்களை 'மாமி' யில் வைற்' தாபனத்தார் இலவசமாக வழங்குகின்றார்கள். தேவையான சபைகள், மன்றங்கள் அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## விண்ணப்பத்தின் அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

மரணசாதன நியாயாதிக்கம் இல 385

பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற விநாயகமுதலியார் சிவசிதம்பரத்தின் மரணசாதனம் விடயமாகவும் — இன்னும்

1977ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட 20ம் இலக்கம் கொண்ட குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டத்தின்படி வெளிநாட்டு புரோபேற்றை இங்கே அமுல் செய்வது சம்பந்தமாகவும்,

1977ம் ஆண்டு பங்குனி மாதம் 7ந் திகதி மட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் புரோபேற் அளிக்கப்பட்டவரும் மேலே குறிப்பிட்ட காலஞ்சென்றவரின் மரணசாதன தத்துவகாரருமாகிய பருத்தித்துறையைச் சேர்ந்த சரவணமுத்து வடிவேலு

—விண்ணப்பகாரர்

இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுந் திகதியிலிருந்து 14 நாட்களுக்குப் பின்பு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்துக்கு மேலே குறிப்பிட்ட பருத்தித்துறை வாசியும் தற்காலிகமாக இல ஏ/5, 23 ம் குறுக்குத்தெரு, பெசன்நகர், மட்ராஸ் 90ஐ சேர்ந்தவருமான காலஞ்சென்ற விநாயக முதலியார் சிவசிதம்பரத்தின் மரணசாதனம் ஒப்பேற்றப்பட்டு மட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் 1977ம் ஆண்டு பங்குனி மாதம் 7ந் திகதி சி. பி 325/1976 இலக்கங் கொண்ட புரோபேற்றை இங்கே அமுல் படுத்துவதற்கு, ஓர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1978ம் ஆண்டு மாசி மாதம் 28ஆந் திகதி

ஒப்பம்: சி. நாகலிங்கமுதலி

விண்ணப்பகாரன் சரவணமுத்து வடிவேலுவின் சட்டத்தரணி

109 7, 14-4-78

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. ஈ 13353

சமரபாகுதேவன் குறிச்சி செல்வரெத்தினம் கைம்பெண் சித்திரம் அல்லது மருமம் ஞானபூங்கோதை.

எதிராக — வாதி

வல்வெட்டித்துறை. வல்வெட்டி கதிரவேலு பஞ்சரெத்தினம்

பிரதிவாதி

மேற் குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட (Reissue) கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 24-ஆம் திகதி (24-5-1978) புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் குறித்த காணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[ கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 14, 687-50சதம் ]

தீர்வைத் தொகை

ரூபா, 7,500/- உம், மேலும், ரூபா 5,000/- க்கு 24-2-1975 தொடக்கம் 25-6-1976 வரையும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும், 26-6-1976 தொடக்கம் விற்பனவுத் திகதி வரை கோட்டு வட்டியும், வழக்குச்செலவு ரூபா 406/95 சதம்.

[ இத்தொகையில் ரூபா 2,150/- கட்டப்பட்டிருக்கின்றது. ]

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று, உடுப்பிட்டியிறை ''ஒருக்கொம்பனுலடி'' வி பர 7. லெ ரி பர. 6 3/4 எல்லை கிழக்கு சுப்பர் நவரத்தினத்துக்கும் மற்றும் பங்குக்குமுடைய வாதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும் செல்லம் பெண் அம்மாவின் உரிமைக் காரருக்குடைய வாதனமும், தெற்கு செல்லம் பெண் அம்மாவின் உரிமைக் காரருடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள் அடங்கலிற் சொரியலாய் அரைவாசியும்.

[ பதிவு பருத்தித்துறை. A. 273/90. ]

தி. வேலுப்பிள்ளை J. P.

[ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு ஆணையாளர், விலைமதிப்பாளர்]

''கெச்சர் வாசம்''
வல்வெட்டித்துறை
20-4-1978

113 28-4

# நாவலர் பிள்ளைத்தமிழ் ஆய்வுரை

[ 'இந்துசாதனம்' இதழிலே தொடர்பாக வெளிவந்த ''நாவலர் பிள்ளைத் தமிழ்'' எல்லோராலும் பாராட்டப்படுகின்றது. உரிய காலத்தில் இந்த உயர்ந்த ஆக்கம் அரங்கேற்றப்படும். அதற்கிடையில் ஆர்வத்துடன் வித்துவான் சி. ஆறுமுகம் எழுதிய ஆய்வுரையை இங்கே தருகின்றோம். பிள்ளைத் தமிழை அள்ளி அள்ளிச் சுவைத்து ஆற்றுமையால் வித்துவான் உள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்ச்சி உரை இது. — ஆசிரியர் ]

( முன் வளர்ச்சி — 3 )

இனி நூலின் நிறைவாக அமைந்துள்ள சிறுதேர்ப் பருவத்தினையுஞ் சிறிது சுவைப்போம். படிப்பவர் உள்ளத்தில் குடியிருக்கும் உயர்ந்த கருத்தோட்டம் நிறைந்த பருவம் அது. உடலுயிர் வாழ்வே ஒரு தேரோட்டம் என்ற உயர்ந்த உண்மையை நன்கு சித்திரிக்கிறது ஒரு பாடல். உடலுயிர் வாழ்வுத்தேரோட்டம் ஒடுங்கவே செவ்வேட் பெருமானின் தேரும் உருளுகின்றது என்ற உண்மை பேசப்படுகின்றது. மனம் என்ற தேரின் ஆணவம் என்ற சாரதி செலுத்துகின்றார். பிங்கலை இடகலை நாடிகள் கடிவாளமாகப் பிராணன் என்ற குதிரை இழுக்கின்றது! வினை காட்டுங் கதிர்த்தேரோடும் வீதியாக விளங்குகிறது! ஆன்மா என்ற பகிர்தல் தேரில உலா வருகின்றது! வீரவான் விதிதான சமூக்குக்கட்டை போடுபவன். வேறென்ன கூறுவது? பாடல் முறறுருவகமாக முடிகிறது. அற்புதமான பாடல்! ''காரவாமாணவகவரி சிறிது வெளிவிட'' என்று தொடங்கி ''வீரவான் விதி சமுக்குக்கட்டையிட'' என்ற இடை நிறுத்தி ''பணிவரு வந்ததை விணவாட்டொடுங்க'' என்று பயன் கூறி ''நீர செவ்வேள் பெருந்தேருருளுகின்றதையாய்'' என விளித்து ''சிறுதேருருட்டியருளே'' எனக் கெஞ்சி, ''செந்தமிழ் வளர்த்துலவ வந்தருள ஆறுமுகனே'' தேருருட்டியருளே'' என வேண்டி நிறைவுற்ற ஆறுமுகப் பதுமவர்

நெஞ்சம் பரவசம் அடையப் பண்ணும் பாடல் மணிகள் பலவற்றைக் கொண்ட பிரபந்தம் நாவலர் பிள்ளைத்தமிழ்.

நூலுள் நுழைபவர் பிரபந்தத்தின் நிறைவிலே ஒரு கலைக் கோயிலைக் காண்பர். சிறுதேர்ப் பருவத்தின் முடிவும நூலின் நிறைவுமாக விளங்கும் அக்கோயிலின் கரு தொல்காப்பியம்; சுவர் திருக்குறள்; சுற்றாலயம் எட்டுத்தொகை சுதை ஒழுக்கம்; மெருகு நீதி. சுவரோவியம் பஞ்சகாவியம்; தூபி சித்தியார் முதலாம் சித்தாந்த சாத்திரங்கள் பதின்மூன்று. முடி சிவஞானபோதம்; தீபம் பெரியபுராணம்; மூலமூர்த்தி திருமுறைகள். கலைக்கோயில் அமைந்து விட்டது! மீண்டும் படிக்கின்றேன்! படிக்கின்றேன்! உடல் புலலரிக்கின்றது! கண்ணீர் ததும்புகின்றது! உண்மை! உண்மை!! செந்தமிழ்க் கலாசார முழுமையும் இத்தகையதென்று உற்றுணரும் வண்ணம் நூலின் முடிமணியாக அமைந்த பாடல் இது. நாவலர் பெருமானே இப்பெருங் கலைக்கோயிலாய் உருத்து எழும்பியவர்! அவர் மீண்டும் அவதரித்தாலென்ன என்ற ஆசையினை எழுப்பும் பாடல் இது! பிரபந்தத்தை நிறைவுப்பாடல தரும் நிறைவும் இது! இத்தகைய நாவலர் பிள்ளைத்தமிழ் நூல் வடிவில் எழுந்து தமிழ்ப்பகம் நலனுலகம் நாவலர் மெய்க்கீர்த்தி என்றே கொண்டாடுக! வேறு செப்பேடும் கல்வெட்டும் செய்ய வேண்டுமோ.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டில்

M B, 540

சின்னையா வேலுப்பிள்ளை விமன்காமம்.

வழக்காளி

எதிராக

ஆழ்வார் சங்கரப்பிள்ளை சோதியமும் பெண் மகேஸ்வரியும் கோவில் வீதி காங்கேசன்துறை

எதிராளி

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டில் M B 540 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக காணியை 1978-ம ஆண்டு வைகாசி மாதம் 5-ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 7800/- பின் 26-2-75 தொடககம் 13-2-76 வரைக்கும் ரூபா 6500/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகையும் இறுபடுமவரை 5 வீத வட்டியும இம முழுத்தொகையிலும் ரூபா 2000/- கழித்து மிகுதி முழுவதும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று பழைய இறை 'ஐயன் வளவு' ஒரு உறுதிப்படி நில, பர 27/32 (முற்பதிவு H 410/107) மேற்படி ஐயன்வளவு மறு உறுதிப்படி நில பர. 25/32 (முற்பதிப்பு H 389 / 157) இவ்விரு காணிகளும ஒன்று சேர்ந்த ஐயன் வளவு வீதி. பர ஒன்றெடு முப்பத்திரண்டில் இருபதும் (நில பர, 1 32/20) வீடும், கிணறும் பயிர்வகைகளும் இதற்கு எல்லை கிழக்கு பொன்னை அரையப்பாவின் ஆதனம. வடக்கும மேற்கும் ஒழுங்கை, தெற்கு கந்தையா அரியரத்தினத்தின ஆதனம் இதடங்கலும்.

சி, சோ. நரசிங்கம், J P

நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்.

தொல்புரம்,
5-3-78.

112 28-4-78

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டில்

வழ இல M B 1149

சின்னத்துரை எதிர்மனசிங்கம் சுழிபுரம் கிழக்கு — வழக்காளி

எதிராக

1. வ, கணபதிப்பிள்ளை
2, க. செல்வத்துரையும பெண்
3, பாக்கியமும் சுழிபுரம் கிழக்கு சுழிபுரம் — எதிராளிகள்.

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டில் இல. எம் பி, 1149-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி 1978-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2-ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 1760-க்கு 1-4-76 தொடக்கம் 6-8-76 வரைக்கும் ரூபா 1060-க்கு 16 வீத வட்டியும் அதன் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் இறுபடும் வரை 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 489-30 சதமும் முழுத் தொகையிலும் ரூபா 750/- கழித்து மிகுதி முழுவதும்.

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இறை 'மருக்காரம் புலம்' பரப்பு நிலஇலாச்சம் 3 1/2 ஐந்தரையும் கிணறும் வீடும் வான் பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு சுப்பிரமணியம சின்னத்துரைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு ஏகலிங்கம் பெண் கதிராசிப்பிள்ளைக்குரிய ஆதனம் தெற்கு தம்பித்துரை பெண் தங்கம்மாவுக்குரிய ஆதனம், இதடங்கலும்

சி. சோ. நரசிங்கம் J. P.

நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்,

தொல்புரம்
19-2-78.

111 28-4-78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

நவகுண்ட மானவை நான் உரை செய்யில்,
நவகுண்டத்துள் எழும் கற்தீபந் தானும்,
நவகுண்டத்துள் எழும் நன்மைகள் எல்லாம்,
நவகுண்டமானவை நான் உரைட்பேனே. . . .

If I am to describe (the fruits of the fire sacrifice of) the nine pots, the highly Resplendent (Lord) arises and everything good arises therefrom. I shall now describe the (sacrifice of the) nine pots.

Hindu Organ

Friday, 28th April, 1978.

# INTENTIONS MUST BE IMPLEMENTED

For the past eight months the people of this country have been, day in and day out, promised a variety of new measures. At first such announcements did really inspire the common man with a genuine hope of progress. But mere statements to be reiterated without any one suggestion being practically carried out for several months at a stretch would certainly create misgivings in the minds of the ordinary man.

It is true that the Ministers of the present Government are all full of ideas and in their eagerness lest they forgot these sudden inspirations, full publicity is being given by every available source of correspondence; and all the time the people are anxiously waiting for the utopia to be ushered into existence.

If the inquisitive critic would only put a few questions based on the ministerial promises, honest replies cannot in anysense be satisfactory.

And, therefore, we would in all seriousness suggest to the Ministers that they should revise their promises and start a defensive campaign by definite deeds, for the Ministers have put themselves 'on Trial.'

The Mahaveli project, meandering and long winded as it is, may be labelled a dream. But what abo t (a) the appointments of teachers (b) the establishment of new Campuses and other educational institutions (c) the proper distribution of the produce of this country amongst the people (d) the reorganisation of the Railway and the C T. B. and above all the curbing of crime

Let the period of actual work begin with May. Let the era of prosperity be ushered in on May Day by practical starting of urgent programme of progressive works.

The present Government has expressed the wish that the May Day may be a Cultural Day. Why not we ask! We have always been critical of the May Day megalomania of the past, for the practice had been not to hoist the dignity of labour but to present it as a fearful feature of disorder.

## Sale of Unredeemed Pawned Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1-1-1977 with Mr. K. K Somasundram of "Shivasakthy", Kandy Road, Kilinochchi on Tuesday 16-5-1978 commencing at 9 a. m. at the said pawn shop.

'Rajagiri'
643, K. K. S. Road,
Jaffna.

Vi S. Cuttiah
Auctioneer

110, 14, 28-4-78

## HANDY COMMEMORATION SOCIETY

"If Handy Perinbanayagam were alive he would be eighty this year. He is remembered with affection and respect as "Handy Master" by his old students and has a host of admirers in Sri Lanka But the young people of today even in Jaffna, do not know that such a man had ever been or that he had dedicated his life to the attainment of national free dom, racial harmony and the rehabilitation of the Swabasha," said Mr C Subramaniam, Emeritus Principal, Skanda Varodaya College, in his opening address at the Handy Commemoration Society which was inaugurated recently.

Continuing Mr Subramaniam said: "We are all aware that Mr. Handy was the moving force behind our first national awakening and our demand for full independence. It is but fitting that we should commemorate the great Youth Leader and patriot by writing the story of the great movement — The Jaffna Youth Congress which stirred the imagination of the Youths of Jaffna so much that they were able to enforce the boycott of the Donoughmore State Council in the Northern Electorates in 1931. It was also his desire that this should be recorded for the benefit of posterity."

Mr Seelan Kadirgamar, Lecturer of the Colombo Campus was elected to write a History of the Youth Congress. A subcommittee had been set up to edit the material available for a supplement to the book, which will include extracts from his writings and speeches, memoirs, anecdotes etc.

As the project meant money it was decided to appeal to all old students, admirers and sympathisers to contribute generously to the Fund to enable the Society to release the Memorial Volume before the first anniversary.

The following were elected offices-bearers:-

President:
Mr. C. Subramaniam
Vice-Presidents:
Mr. K A Selliah
Prof. Luther Jeyasingham
Secretaries:
Mr. N. Sabaratnam
Mr. V Sivasupramaniam
Treasurer:
Mr. A. S. Kanagaratnam

with a committee of 20.

## SAIVA PERIYAR SRI SHIVAPATHA-SUNDERAMPILLAI AVERGAL

By S. SIVASUBRAMANIAM
(Life Member, Jaffna Saiva Paripalana Sabhai and Retired Proctor)

An important event in the life of the Hindu community in Sri Lanka is fast approaching. It is the forthcoming Centenary of Sri S. Shivapathasunderampillai Avergal, one of the greatest Saivites of contemporary times — He came from a distinguished and orthodox family of Saivaites who had rendered invaluable services to our holy religion and our community through their scholarship, piety and way of living. He continued in his own life that noble tradition and lived and died in the service of Saivaism. His efforts in the cause of Hindu Education, his writings, his propaganda, his Saiva way of conduct, his work in the matter of the restoration of the ancient and sacred Temple of Thiruketheshwaram are among the few of the manifold services he rendered without cessation to the cultural, intellectual and religious life of the Hindus. His name and fame were recognised in other countries like India and Malaysia. By precept and practice, he improved the individual life of thousands of the countrymen. The torch of Hindu learning, culture and religion which burnt in spite of vicissitudes from the days of the Hindu Kings of Sri Lanka for countless millenniums notwithstanding set backs common to all causes, and rekindled by the distinguished forerunners of Sri-Lanka ri Arumuga Navalar and by the great Navalar himself and his contemporaries was held aloft in a special manner by Sri Shivapathasunderampillai and the honoured family to which he belonged. It is in the fitness of things that a dutiful public is making arrangements to celebrate the Centenary of such a savant and devotee. It is fervently trusted that such celebrations would prove adequate and fruitful and enable the ideals of our holy religion which Sri Shivapathasunderampillai held so dear, and with such deep veneration, to continue to be practised well. Among the innumerable behests of Saivaism are the adoption of vegetarian diet and the wearing of the sacred vibhoothy—two bare minimum items which the late respected Shri Shivapathasunderampillai incessantly emphasized. The success of the forthcoming celebrations could only be partially achieved by a substantial increase in the number of Hindus who would put into practice these two fundamental requirements. It is to be fervently hoped that the maximum amount of efforts is put forward by the Hindu public to further these twin noble and immortal objectives by precept and personal example in the individual life of every Hindu. Sri Shivapathasunderampillai used to repeat the ancient immemorial and sublime thought that Empty Talk is useless and that Actual Practice of Ideals and Devotion is the one and only Thing that Almighty and All Merciful Shiveperuman required from us, poor, humble, and ordinary mortals, at all times in unceasing manner without abatement.

### வாழ்த்துகிறோம்

எங்கள் அச்சகத்தில் கணக்காளராக நெடுங் காலம் கடமை புரிந்துவந்த திரு. க. முத்துக் குமார சுவாமி அவர்கள் திருநெல் வேலி திரு சண்முகநாதன் புத்திரி செல்வி சாவித்திரி தேவியைத் திருநெல்வேலிச் சிவன் கோயில் மண்டபத் திலே பிரமஞேத்தமர், பெற்ருேர் உறவினர் நண் பினர் சமுகத்திலே திரு மணம் செய்து நல்லாசி யைப் பெற்றனர்.

புதுத் தம்பதிகளின் வாழ்வு இறை அருளாற் பொலிந்து வளமாய் விளங் குவதாகுக.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, April 28, 1978.

EDITOR-IN-CHIEF: R. N. SIVAPIRAKASAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org